# சொல்லடைவும் அகராதியும்

By

**ஹெப்ஸி ரோஸ் மேரி, அ.**

*இணைப்பேராசிரியர், கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், காரியவட்டம், திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*சொற்கூறுபாட்டாய்வே சொல்லடைவாகும். சொல்லடைவு பல நிலைகளில் உருவாக்கப்படுகின்றன. சொற்களின் பகுதிகளைப் பிரித்து அச்சொல்லின் பொருள், இலக்கணக்குறிப்பு, வினைத்திரிபு, செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாவினை , பொருள் வருமிடம் ஆகியவற்றை எடுத்துரைப்பது சொல்லடைவின் தன்மை ஆகும். இச்சொல்லடைவுகள் அனைத்தும் முழுக்க முழுக்க இலக்கணத்தோடு தொடர்புடையவை. இக்கட்டுரை சொல்லடைவையும் அதன் பகுதிகளையும் விளக்கி, கேரளப் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்டச் சொல்லடைவுகளையும் அவை அகராதியிலிருந்து மாறுபடும் தன்மைகளையும் எடுத்துரைக்கிறது.*

***கலைச்சொற்கள்:*** *சொல்லடைவு, செயலி,பெருந்திட்டம், நுண்ணாய்வு*

## முன்னுரை

ஒரு பனுவலில் அல்லது பிரதியில் வரும் சொற்களின் பகுதிகளைப் பிரித்து அச்சொல்லின் பொருள், இலக்கணக்குறிப்பு, வினைத்திரிபு, செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றாவினை, பொருள் வருமிடம் ஆகியவற்றை எடுத்துரைப்பது சொல்லடைவு ஆகும். இச்சொல்லடைவுகள் அனைத்தும் முழுக்க முழுக்க இலக்கணத்தோடு தொடர்புடையவை. தற்காலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாகப் பல செயலிகளின் துணைக்கொண்டு இச்சொல்லடைவு உருவாக்கம் சாத்தியமாகிறது. இக்கட்டுரை கேரளப்பல்கலைக்கழகத்தில் உருவக்கப்பட்டச் சொல்லடைவுகள் சிலவற்றை எடுத்துரைத்து அகராதிகளில் இருந்து இவை மாறுபடும் முறையை விளக்குவதாக அமைகிறது.

## கேரளப் பல்கலைக்கழகச் சொல்லடைவுகள்

கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் சங்ககாலம் முதல் இக்காலம்வரையிலான பல்வேறு இலக்கியங்களுக்குச் சொல்லடைவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. பேரா. வ. அய் . சுப்பிரமணியன் அவர்களின் காலத்தில் இருந்தே முதுகலை மாணவர்களுகுச் சொல் கூறுபாட்டாய்வு கொடுக்கப்பட்டது. மொழியாய்வாக ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்களுக்கும் முனைவர்பட்ட ஆய்வாளர்களுக்கும் கொடுக்கப்பட்டன. இவ்வாய்வுகள் அனைத்தும் ஒரு பெருந்திட்டத்தை (Macro Study) மனதில் கொண்டே இத்தகைய நுண்ணாய்வுகள் (Micro study) செய்யப்பட்டன. முதுகலை நிலையில் செய்யப்பட்டச் சொல்லடைவுகளில் பல குறைகள் காணப்படுகின்றன. 'இலக்கியம் கற்பித்தலில் சொல்லடைவு முக்கிய இடத்தைப்பெறுகின்றது. இலக்கியக்கல்வியில் தேர்ச்சியடைய விரும்பும் ஒருவர் அவ்விலக்கியத்திற்கான சொல்லடைவு ஒன்றினை உருவாக்கிக் கொள்ளவேண்டும். சொல்லடைவு மூலம் கற்றல் என்பது ஓர் இலக்கியம் ஒன்றின் ஆழ அகலங்களைக்காண உதவும். தமிழில் ஆழங்காற்பட்ட அறிஞர்க ளெல்லாம் இவ்வாறு கற்றவர்களே. சிலப்பதிகாரத்தில் விளக்கவியல் இலக்கணம் செய்த ச.வே.சுப்பிரமணியன் அவர்களின் சிலப்பதிகாரப் பயிற்சியை அவரது சிலப்பதிகார நூல்களில் அறியலாம். அவரின் சிலப்பதிகார உரை (கங்கை புத்தக நிலையம்) படித்தவர்களுக்கு அதன் அருமை புரியும்' என்று தி இராஜரத்தினம் தமது கட்டுரையில் சொல்லதிகாரத்தின் சிறப்புக்களைக் குறிப்பிடுகிறார், பேரா. வ. அய். சுப்பிரமணியம் அவர்கள், அதனை 'Index' என்றார். இன்றைய

மேலைநாட்டு அறிஞர்கள் 'Glossary' என்கின்றனர். பின்வரும் அட்டவணை கேரளப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட முக்கியமான சில சங்கச்சொல்லடைவுகளை எடுத்துரைக்கிறது.

**கேரளப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட சங்கச்சொல்லடைவுகள்**

| சொல்லடைவு | ஆசிரியர் | ஆண்டு |
|---|---|---|
| புறநானூறு | வ.அய்.சுப்பிரமணியம் | 1962 |
| பத்துப்பாட்டு | இராமசுந்தரம் | 1964 |
| குறுந்தொகை | கிருஷ்ணாம்பாள் | 1974 |
| ஐங்குறுநூறு | மா.இளையபெருமாள் | 1975 |
| அகநானூறு | ச.வே.சுப்பிரமணியன் | 1972 |
| சிலப்பதிகாரம் | ச.வே.சுப்பிரமணியன் | - |
| பதிற்றுப்பத்து | ச.அகஸ்தியலிங்கம | 1977 |
| நற்றிணை | அ.காமாட்சிநாதன் | 1981 |
| கலித்தொகை | தே.ஆண்டியப்பன் | - |

இதைத்தவிர அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், தொல்காப்பியம், நன்னூல், நவீனக்கவிதைகள் உள்பட முந்நூறுக்கும் மேற்பட்டச் சொல்லடைவுகள் கேரளப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவைபோகத் தமிழகத்திலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் பல சொல்லடைவுகளை உருவாக்கியுள்ளனர் அவை பின்வருமாறு,

1. சங்க இலக்கியச் சொற்களஞ்சியம் - தண்டபாணிதேசிகர், திருவாவடுதுறை ஆதீனம், 1963.
2. Index des mots de la litterature tamoule ancienne> பிரெஞ்சிந்திய நிறுவன வெளியீடு(IF), 3 பகுதிகள், 1967.
3. Pre–Pallavan Tamil Index, N.Subrahmanian, University of Madras> 1966, 1990.
4. A word index of old Tamil Sangam Literature - தாமஸ் லேமான் மற்றும் தாமஸ் மால்டன், 1992.
5. Word index for Cankam literature> ஆசியவியல் நிறுவனம், சென்னை, (2007).
6. சங்க இலக்கியச் சொல்லடைவு, பெ.மாதையன், தமிழ்ப்பல்கலைக்கழகம், (2007) என்பனவாகும்.

இவற்றுள் சில சொல்லடைவுகளுக்குச் சொற்களுக்குப் பொருள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கண விளக்கம் குறிக்கப்படவில்லை. பெயர், வினை என்ற பாகுபாடு மட்டுமே காணப்படுகின்றன. அறைகுறையாக இத்தகையச் சொல்லடைவுகள் காணபடுகின்றன. ஆனால் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மற்ற சொல்லடைவுகளிலிருந்து மாறுபட்டு பல அரிய நூல்களுக்கு முழுமையான இலக்கணக் குறிப்புக்களை வரையறுத்து சொல்லடைவு களைத் தயாரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

’மரபிலக்கியமோ தற்கால இலக்கியமோ கற்பித்தலில் சொல்லடைவு என்பதன் பங்கு குறிப்பிடத்தக்கது. சொல்லடைவு மற்றும் இலக்கணக்குறிப்புத் தயாரிப்பதால் ஓர் இலக்கியத்தில் வந்துள்ள பெயரெச்சம், வினையெச்சம், வேற்றுமை, பெயரடை,

வினையடை என அனைத்தையும் ஒன்றாகக் காலவாரியாகப் பொருள் அடிப்படையிலும் வடிவ அடிப்படையிலும் பார்க்க முடியும். தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் இலக்கணக் கூறுகள் பொருள் அடிப்படையிலும் (வேற்றுமை உருபுகளுக்கான பொருள்) வடிவ அடிப்படையிலும் (செய்த, செய்கின்ற, செய்யும் -வாய்ப்பாடு) வகைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த இலக்கியங்களில் விவரண அடிப்படையில் இலக்கணம் எழுதி பொருள் அடிப்படையிலும் வடிவ அடிப்படையிலும் இருப்பவற்றை மரபு இலக்கணங்களோடு ஒப்பிட்டு ஆராய இத்தகைய சொல்லடைவுகள் துணைபுரியும். ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த இலக்கியங்களின் இலக்கணக்கூறுகளை வகை, தொகை செய்து விதிகளாக்கி அவற்றைப் பிற காலகட்ட விதிகளோடு ஒப்புநோக்கவேண்டும். இவ்வாறு எல்லாக்காலங்களுக்கும் ஒப்பு நோக்குக்கும்போது, ஒரு காலகட்டத்தில் இருந்து மற்றொரு காலகட்டம் வேறுபடும் இடம் புரியவரும். இவற்றை ஒழுங்குபடுத்தினால், அது மொழிவரலாறாக அமையும். விளக்கமுறையில் ஒவ்வொரு இலக்கியத்தையும் ஆராய்ந்து பின் வரலாற்று முறையில் அவற்றை ஒன்றோடொன்று காலகட்டங்கள்தோறும் ஒப்பிட்டால் இலக்கண வரலாற்றையும் இலக்கியத்திற்கான மொழிவரலாற்றையும் உருவாக்க இயலும்.

## சொல்லடைவும் அகராதியும்

சொல்லடைவும் அகராதியும் பார்ப்பதற்கு ஒன்றே போன்று காட்சியளிக்கும். எனினும் இவற்றிற்கிடையே பல மாற்றங்கள் காணப்படுகின்றன. அவற்றை இப்பகுதியில் காண்போம். சொல்லடைவிலும் அகராதியிலும் சொற்களும் அதற்கான பொருள் நிலையும் கட்டாயம் அமைகின்றன. அச்சொற்களின் இலக்கணக்கூறுகளை வரையறுப்பதில் இரண்டும் மாறுபடுகின்றன. சொல்லடைவில் இலக்கணக்கூறுகள் விரிவாக இடம்பெறும். அகராதிகளில் பெயர், வினை, வினைமுற்று, பெயரடை, வினையடை என்ற இலக்கணப் பகுப்புகள் மட்டுமே இடம்பெறும். ஆனால் சொல்லடைவுகளில் விரிவான இலக்கண விளக்கப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன. சொல்லடைவில் பெயர் என்றால் பெயர், பெயரடை, தன்மைப்பெயர், முன்னிலிப்பெயர், வினாப்பெயர், வினையாலணையும் பெயர், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் போன்ற நுட்பமான இலக்கணக்கூறுகள் காணப்படுகின்றன. தமிழ்ப்பேரகராதி தவிர்த்த ஏனைய அகராதிகளில் வினைத்திரிபு இடம்பெறுவதில்லை. அதுபோலவே செயப்படுபொருள் குன்றிய வினையும் குன்றாவினையும் சொல்லடைவில் குறிப்பாக இடம்பெறுவதைக்கணலாம்.

## சொல்லடைவின் பயன்கள்

சொல்லடைவுகள் தயாரிப்பதால் ஒரு மாணவன் இலக்கணக் கூறுகளை நன்கு அறிந்து கொள்கிறான். அகராதியியல் ஆய்வுக்கு இது பயன்படுகிறது. (Lexico graphy study). வரலாற்றுமுறை ஆய்வு உருவாக்க இச்சொல்லடைவு பயன்படுகின்றன. வேலுப்பிள்ளை முதலில் எழுதிய வரலாற்றிலக்கணத்தோடு இன்று வரலாற்றிலக்கணம் நின்றுபோயிற்று. தமிழ் வறலாற்றிலக்கணம் உருவாக்க இச்சொல்லடைவு பெரிதும் பயன்படுகின்றன. இயந்திர மொழிபெயர்ப்புக்கு Machine Translation உதவுகிறது. இன்றைய காலச்சூழலில் கணினி வழியாக ஒரு தொடர் கொடுத்தால் அதைப் பிரித்து விடுகிறது. காலகாலமான மனித மூளையின் பயன்பாட்டால் உருவாக்கப்பட்டதே இது. இம்மாதிரியான நுண்ணாய்வால் காலவாரியான வரலாற்றிலக்கணம் உருவாக்க இயலும்.

## சொல்லடைவு உருவாக்கம்

சொல்லடைவின் உருவாக்கத்திற்கு அடிப்படை சொற்களாகும். சொற்களாலான பனுவல் எதுவாக இருந்தாலும் சொல்லடைவு உருவாக்கத்திற்குப் பயன்படுத்தலாம். இச்சொற்களைத் தொல்காப்பியர் எழுத்துக்கள் தனித்தோ தொடர்ந்தோ நின்று பொருள் தருவது. சொல்லென்று விளக்கம் தருகிறார்.

“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”

தொல். பெய.1.

தனிமொழி, தொடர்மொழி ( தொல். சேனா.1.)

தனிமொழியுள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பவை அடங்கும். சொல்லடைவு உருவாக்கும்போது ஒரு தொடரிலுள்ள அனைத்துச் சொற்களையும் பெயர், வினை, வேற்றுமை உருபு இடைச்சொல் என்று அனைத்தையும் பகுக்க வேண்டும். அவ்வாறு பகுத்த சொல் பெயர்ச்சொல்லாயின் அதன் வகைகளுள் எவ்வகை என்பதைக் குறிக்க வேண்டும். பெயர்ச்சொல்வகைகளான மாற்றுப்பெயர், வினாப்பெயர், சுட்டுப்பெயர், இயற்பெயர் என்பனவற்றுள் அது எந்த பெயர் என்பதைக் குறிக்க வேண்டும். சில பெயர்ச்சொல் வகைப்பாடுகள் பின்வருமாறு,

- பெயரடி நிலையில் பெயர்கள்.
- மாற்றுப்பெயர்கள் – அவன், அவள், அவை, அது.
- எண்ணுப்பெயர்கள் – ஒன்று இரண்டு, நூறு, ஆயிரம்.
- திசைப்பெயர்கள் – கிழக்கு, மேற்கு.
- இயற்பெயர்கள் – பூமி சூரியன்.
- விகுதி நிலையில் பெயர்கள்.
- ஆண்பால் விகுதி – மகன், சகோதரன்.
- பெண்பால் விகுதி – மகள், சகோதரி, பால்காரி.
- பலர்பால் விகுதி – சகோதரர்.
- ஒன்றன்பால் விகுதி.
- பலவின்பால் விகுதி.

பெயர் அல்லது பெயர்த்தொடருக்குப் பதிலாக வருபவை. இடப்பெயர்கள், சுட்டுப்பெயர்கள், வினாப்பெயர்கள், எண்ணுப்பெயர், எண்ணுப்பெயரடை என்பன. இனி அவற்றிற்கானச் சான்றுகளைக் காண்போம்.

எ.கா.

இடப்பெயர்கள்–மதுரை,கோவை, திருவனந்தபுரம்
சுட்டுப்பெயர்கள் –அவன், அவள், இவன் இவள்
வினாப்பெயர்கள்–யாது, யாவர், யாவை, எவை, எது

எண்ணுப்பெயர்கள் - ஒன்று, இரண்டு, பத்து நூறு, ஒருவன், ஒருவள் ஒருத்தி , ஒருத்தன், இருவர், மூவர்

எண்ணுப்பெயரடை - ஒரு , இரு , ஓர், ஈர், மூ, நால், ஐ

மேலும் பெயரோடு இயைந்து வரும் வேற்றுமை உருபுகளையும் பிரித்து அதன்பொருள் நிலைகளையும் எழுத வேண்டும். அவ்வாறு செய்யும்போது ஒட்டுமொத்த இலக்கியத்தில் பயின்றுவரும் வேற்றுமை உருபுகளின் பொருள் நிலைகளைக் கண்டறிய இச்சொல்லடைவு பெரிதும் துணை நிற்கும்.

சொல்லடைவில் வரும் வினைச்சொற்களுக்குப் பின்வரும் நிலையில் மரபிலக்கணங்கள் இலக்கணம் கூறுகின்றன. வினைச்சொற்கள் காலம் காட்டும், வேற்றுமை ஏற்காது, அடைகளைப் பெற்றுவரும், விகுதி நிலையில் திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும். இவை தெரிநிலை, குறிப்பு என்னும் இரண்டு வகைகளில் அமையும் என்று கூறுகின்றன. சொல்லடைவில் வினைச் சொற்களைப் பகுக்கும்போது தெரிநிலைவினை, குறிப்பு வினை, செயப்படுபொருள் குன்றா வினை, செயப்பபடுபொருள் குன்றிய வினை, வினைமுற்று, எச்சம் பெயரெச்சம் வினையெச்சம்) ஏவல்வினை, வியங்கோள் வினை, தன்வினை, பிறவினை, துணைவினை, வினையடை, தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் என்ற நிலைகளில் வினைச்சொற்களை வகைப்படுத்த வேண்டும் .

## முடிவுரை

சொல்லடைவு குறித்த தெளிவான புரிதலையும் இலக்கணப் பகுப்புக்களையும் ஒரு மாணவன் பெற்றுக்கொள்வானாயின் அகராதியியல்த் துறை, மொழிபெயர்ப்புத்துறை, இயந்திர மொழிபெயர்ப்புத்துறை உள்ளிட்ட துறைகளில் எளிதில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக கொள்ளலாம். இச்சொல்லடைவுகள் வரலாற்று முறை இலக்கண உருவாக்கத்திற்கும் அகராதி உருவாக்கத்திற்கும், மின்னகராதி உருவாக்கத்திற்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

**பார்வை நூல்கள்**

இளையபெருமாள், ம. ஐங்குறு நூறு சொல்லடைவு, தமிழ்த்துறை வெளியீடு, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் 1975.

இராஜரெத்தினம், கேரளப் பல்கலைக்கழகச் சொல்லடைவுகள், அச்சேரா கட்டுரை.

கிருஷ்ணாம்பாள், குறுந்தொகைச் சொல்லடைவு, தமிழ்த்துறை வெளியீடு, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், 1974.

சுப்பிரமணியம், வ, அய். புறநானூறு சொல்லடைவு, தமிழ்த்துறை வெளியீடு, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் 1972.

தண்டபணி தேசிகர், சங்க இலக்கியச் சொற்களஞ்சியம், திருவாவடுதுறை ஆதீனம், 1963.

மாதையன், பெ. சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப்பல்கலைக்கழகம், 2007.

## To cite this article

*****************

Hepsy Rose Mary, A. (2022). சொல்லடைவும் அகராதியும். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 5*(4), 1-5.

*****************************************************************************************

## ABOUT THE AUTHOR



***Dr Hepsy Rose Mary, A.*** *working as an Associate Professor, Department of Tamil, University of Kerala, Kerala. She got a Ph.D in Kerala University on the Topic Veerachozhiyam and Neminatham - A Comparative Study. She has published six books and seventy five articles in various journals in that twenty articles are published in UGC Referred journals. She also participated and conducted so many national and international seminars. She conducted four batches of Refresher Courses for College and University teachers. She won Best faculty award and Aayvuchemmal award. She has completed three minor project and doing one Major Project.*

*****************************************************************************************